**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.07** **நாள்: 07.01.2025**

**போகிப் பண்டிகையை முன்னிட்டு, சுற்றுச்சூழல் மாசுபாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் பொதுமக்கள் பிளாஸ்டிக் டயர் மற்றும் பழைய துணி உள்ளிட்ட இதரப் பொருட்களை எரிப்பதைத் தவிர்த்து, மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களிடம் வழங்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

போகிப் பண்டிகையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் தங்களிடையே பயன்பாட்டில் இல்லாத பொருட்களான பழைய துணி, பிளாஸ்டிக் டயர் (Plastic Tyre), ரப்பர் ட்யூப் (Rubber Tube) மற்றும் நெகிழி (Plastic) ஆகியவற்றை எரிப்பதன் மூலம் காற்று மாசு அடைந்து பொதுமக்களுக்கு பல்வேறு உடல் நல பாதிப்புகள் ஏற்படுகிறது.

எனவே, சுற்றுச்சூழல் மாசு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் உள்ள அனைத்து வார்டுகளிலும் மக்கள் தங்களிடையே உள்ள பிளாஸ்டிக் டயர்கள், பழைய துணிகள் மற்றும் இதரப் பொருட்களை எரிப்பதைத் தவிர்த்து, அவற்றைத் தனியாக சேரித்து தங்களது இல்லங்களுக்கு குப்பை சேகரிக்க வருகைதரும் மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**